I Additional District Court, Thoothukudi.

<u>O.S.No.239/2024 நாள் : 04.08.2026 வா.சா.3– திரு. பார்த்திபன்.</u>

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1ம் பிரதிவாதிக்கும், எனக்கும் பேச்சுவார்த்தையில்லை. தாவா சொத்து விபரம் தெரியும். அவற்றின் புல எண் தெரியாது. விஸ்தீரணம் தெரியாது. வழக்கில் 4 தபசில்கள் காட்டப்பட்டுள்ளது. 1ம் தபசில் சொத்து விவசாய நிலம். 1ம் தபசில் சொத்து வாதிகளின் பூர்வீக சொத்து. அவர்களின் தகப்பனார் மூலமாக வந்த சொத்து. கோவிந்தசாமி நாயக்கர் மூலமாக வாதிகளுக்கு கிடைத்தது. கோவிந்தசாமி நாயக்கருக்கு 1ம் தபசில் சொத்து பூர்வீகமாக பாத்தியப்பட்டது. அருகில் எங்கள் நிலம் இருப்பதால் அந்த விபரங்கள் எனக்குத் தெரியும். கோவிந்தசாமி நாயக்கரின் தகப்பனார் பெயரில் பட்டா இருந்ததா என்று எனக்குத் தெரியாது. இருதரப்பினருக்கும் சொத்து பிரச்சனை குறித்து 2024க்கு பிறகு எனக்குத் தெரியும். 2, 3, 4 தபசில் சொத்துக்கள் நத்தம் நிலம் என்றால் சரிதான். அந்த சொத்துக்களுக்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்று தெரியாது. 1ம் தபசில் சொத்தின் கிழபுறம் எங்கள் பூர்வீக சொத்து. மேற்குபுறம் விஷ்ணுபிரியா என்பவருக்கு பாத்தியப்பட்டது. வடபுறம் சாலை. தென்புறம் கோவிந்தசாமி நாயக்கருக்கு பாத்தியப்பட்டிருந்த சொத்தும், வேறு ஒரு சொத்தும் உள்ளது. வா.சா.1–ஐ தெரியும். தாவா சொத்துக்கள் தற்போது பிரதிவாதிகள் சுவாதீனத்தில் உள்ளன. 2ம் தபசில் சொத்தில் பிரதிவாதிகள் இரண்டு அடுக்கு மாடி வீடு கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். வாதிகள் குடும்பத்தில் ஏற்பட்ட பாகப்பிரிவினை பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது. 3ம் பிரதிவாதியின் கணவர் பெயர் திருவடிச்சாமி என்றால் சரிதான். 3, 4 தபசில் சொத்துக்கள் திருவடிச்சாமி பெயரில் பட்டா உள்ளன என்றால் சரிதான். 1ம் தபசில் சொத்திற்கு யார் பெயரில் பட்டா மற்றும்

பத்திரம் உள்ளது என்று நான் பார்க்கவில்லை. 1ம் தபசில் சொத்து யார் அனுபவத்தில் இருந்து வருகிறது என்று எனக்குத் தெரியாது. என் தகப்பனார் பெயர் முனியாண்டிசாமி. என் தகப்பனாருடன் பிறந்தவர்தான் 1ம் பிரதிவாதி. வழக்குரை 1ம் தபசில் சொத்திற்கு கிழபுற எல்லையாக நாகவ நாயக்கர் புஞ்சைக்கு மேற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த நாகவ நாயக்கர் என் தகப்பனாரின் தகப்பனார். 1ம் தபசில் சொத்திற்கு அருகில் நாகவ நாயக்கருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் இருந்தது என்றால் சரிதான். அவரது சொத்துக்களை அவரது பிள்ளைகள் அனைவரும் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். 1ம் தபசில் சொத்திற்கு பட்டா எண் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணங்கள் 1ம் தபசில் சொத்து மற்றும் சில சொத்துக்கள் குறித்த அடங்கல் நகல்கள் என்றால் சரிதான். அது **பி.சா.ஆ 6** வரிசை. அந்த அடங்கல்கள் 1, 2 பிரதிவாதிகள் பெயரில் உள்ளது. தாவா சொத்துக்கள் பிரதிவாதிகளிடம் சுமார் 40 ஆண்டுகளாக அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் எனக்கு தெரிந்து சுமார் 10 ஆண்டுகளாக பிரதிவாதிகளின் அனுபவத்தில் இருந்து வருகிறது. இருதரப்பினரும் நாயக்கர் சமூகத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். திருவடிச்சாமி என்பவர் வாதிகளின் மூதாதையர். கொத்தபுலி என்பது அவர்களின் குடும்ப பெயர். 3ம் பிரதிவாதியின் கணவர் பெயர் திருவடிச்சாமி. எங்கள் குடும்ப பெயர் கொம்மினி. கொத்தபுலி திருவடிச்சாமியும், கொம்மினி நாகவ நாயக்கரும் உடன்பிறந்தவர்கள் அல்ல. இரண்டு குடும்பத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. இரண்டு குடும்பங்களுக்கும் பொதுவான சொத்துக்கள் இருந்தது. நாகவ நாயக்கரின் மனைவி கொத்தப்புலி திருவடிச்சாமியின் மகள். நாகவ நாயக்கருக்கும், கொத்தப்புலி திருவடிச்சாமிக்கும் சேர்ந்து பாத்தியப்பட்ட சொத்துக்கள் எதுவுமில்லை. அதனால் வா.சா.ஆ1ன் படி இருவரும்

சேர்ந்து பாகம் பிரித்துக் கொண்டதாக இந்த வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் வாதியின் கணவர் பெயர் ராஜேந்திரன். அவர் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தார். அதை சாதகமாக்கிக் கொண்டு வருவாய்த்துறையில் போலியான ஆவணங்களை உருவாக்கியிருக்கிறார்கள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் சம்பந்தமாக பாகப்பிரிவினை பத்திரத்தை பார்த்தேன். வேறு ஆவணங்களை பார்க்கவில்லை. பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்துக்கள் சம்பந்தமாக ஆவணங்களை நான் பார்க்கவில்லை. என் நிரூபண வாக்குமூலத்திற்கான சங்கதிகளை வாதிகள் சொன்னார்கள் என்றால் சரிதான். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியாது. வாதிகளுக்கு சாதகமாக பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கும், எனக்கும் பகையை கருத்தில் கொண்டு வாதிகளுக்கு சாதகமாக பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.